உ
ஓம் நமசிவாய

# கண்குளிரக் கண்டோம் கயிலை மலையை

கயிலாயம் என்பது சிவபெருமானும் பார்வதி தேவியும் நித்ம் உறையும் இடமாகும். நமது நாட்டின் வடக்கு அரணான இமயமலையின் சீன ஆதிக்கத்துக்கு உட்பட்ட திபெத் பகுதியிலுள்ள என்றும் பனிபடர்ந்த மகாமலைதான் கைலாயம் கடல்மட்டத்திலிருந்து 22,000 அடி உயரத்திலுள்ள மிகப்பரந்த மானசரோவர் ஏரியிலிருந்து தான் கயிலாய மலையின் முதல் தரிசனம்.

காணப்பிறவிகள் ஆயிரம் நலம் செய்தல் வேண்டும் எனப் போற்றப்படும் கயிலை மலையைக் கான நம் சமூகத்தினர் 10 பெண்கலும் 17 ஆண்கலுமாக, சுற்றுலாப் புகழ் சென்னை வாழ் நெற்குப்பை நகரத்தார் சங்கத்தின் தன்னிகரற்ற ஏற்பாட்டின் படி சங்கத்தின் முன்னாள் தலைவர் திரு.PL.வைரவன் மற்றும் வேகுப்பட்டி திரு.முத்துப்பழநியப்ப செட்டியாரின் தலைமையில் 2012 ஜூன் 9ஆம் நாள் காலை சென்னையிலிருந்து புறப்பட்டு விமானம் மூலம் டெல்லி சென்று பிறகு மற்றொரு விமானம் மூலம் மாலை 5 மணிக்கு நேபாள் தலைநகர் காட்மண்டு சென்றடைந்து தங்கும் விடுதியில் தங்கினோம். 10 வருடங்களாகக் கைலாயம் செல்லக் கனவு கண்டுகொண்டிருந்த எங்களுக்குப் போக முடிவு செய்தபின்பும் எத்தனையோ சிக்கல்கள் ! குழப்பங்கள், அவை அனைத்தையும் அவனருளாளே தாங்கி மிக்க ஆர்வத்துடன் சென்று அந்தோம்.

ஜூன் 10ஆம் தேதி காலை காத்மண்டுவில் பாக்மதி நதிக்கரையில் அமைந்துள்ள மிகப்பெரிய பசுபதி நாதர் ஆலயம் சென்றோம். கருவறையின் 4 வாசல்கள் வழியாகப் பஞ்ச (ஐந்து) முகம் கொண்ட பசுபதிநாதரை உளமாரப் பிரார்த்தனை செய்து மகிழ்ந்தோம். அங்குள்ள 1008 சிவலிங்கங்களையும் நம் கைகளால் தொட்டு வணங்கியது மிகவும் நல்ல உடற்பயிற்சியாகவும் மனதிற்குப் பரவசமாகவும் இருந்தது. பிறகு தாமோதரகுண்ட், ஜலகண்ட பெருமாள், அம்மன் கோவில் சென்று வழிபட்டு தங்கும் விடுதிக்கு வந்து சேர்ந்தோம். மாலை கயிலாயப் பயணம் பற்றி விளக்கமாக எடுத்துரைத்தார்கள்.

அடுத்தநாள் காலை காட்மண்டுவிலிருந்து புறப்பட்டு சுமார் 5 மணிநேரம் சுகமான பேருந்தில் 150 கிமீ பயணம் செய்து சீனநட்புப் பாலம் கடந்து சீன விசா சரிபார்க்கப்பட்டபின் 3750 மீட்டர் உயரத்திலுள்ள நியாலம் என்ற இடத்தை அடைந்தோம். அங்கேயே குளிர் ஆரம்பித்துவிட்டது. எங்களுக்கு மட்டும் மூச்சு வாங்குவதாக நினைத்து முதலில் பயந்தோம். பிறகுதான் தெரிந்தது எல்லோருக்கும் அந்த அனுபவம் என்று. அங்குள்ள சீதோஷ்ணநிலையைப் பழக்கிக்கொள்ள ஒரு நாள் அங்கேயே தங்கிவிட்டு சாகா என்ற இடத்தை நாங்கள் சென்றடைந்தவுடன் எங்களது குழுவிலுள்ள மேலைச்சிவபுரியை சேர்ந்த ஸ்ரீ சிவபிராகசம் செட்டியார் நேர்ந்த மிகவும் துயரமான அசம்பாவிதமாக சிவபதவி அடைந்தன் காரணமாக மிகவும் தியாக மனப்பான்மையுடன் திரு.முத்துப்பழநியப்ப அண்ணன் அவர்களுடன் காட்மண்டு திரும்பவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. திரு.முத்துப்பழநியப்ப அண்ணன் கயிலாயம் வந்திருந்தால் கூட இத்தகைய புண்ணியம் கிடைத்திருக்குமா என்பது உறுதியல்ல. தானே முன்வந்து கிடைத்தற்கரிய கைலாயப்பயணத்தை ரத்து செய்துவிட்டு மிகப்பெரிய தியாகம் செய்த அவர்களை மனதாரப் பாராட்ட நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். அதன் பிறகு நெற்குப்பை நகரத்தார் சங்கத்தின் முன்னாள் தலைவர் திரு.

PL.வைரவன் செட்டியார் தலைமையில் மிகவும் கனத்த இதயத்துடன் எங்கள் பயணத்தைத் தொடர்ந்து ப்ரயாக் என்ற இடத்தை அடைந்தோம் குளிர்வாட்டிஎடுத்தது.

**14.06.12** அன்று மானசரோவர் நோக்கிப் புறப்பட்டோம். கொஞ்சநேரம் பஸ்ஸில் சென்றவுடன் எல்லோருக்கும் இன்ப அதிர்ச்சி. ஆம் ! காண்போமா? காணக் கிடைக்குமா என்று ஏங்கியிருந்த எங்களுக்கு கைலாயத்தின் முதல் தரிசனம் அக்காட்சியில் மனதைப் பறிகொடுத்துத் தரையில் வீழ்ந்து வணங்கினோம். சுற்றியுள்ள மலைகள் பழுப்பு நிறத்தில் இருக்கக் கைலாயம் மட்டும் விபூதி அபிஷேகம் செய்தாற்போல் நடுவில் வெள்ளிப்பணி மலையாய்க் கம்பீரமாக நின்றது. எங்கள் அகக் கண்ணிற்கு மணி மகுடம், விபூதிப் பட்டை, தும்பிக்கை, பானைவயிறு முதலியவற்றுடன் முழுமுதற் கடவுளாம் விநாயகர் போலத்தெரிந்தது.

நீல நிறக்கடல் போன்று பரந்து விரிந்திருந்த மானசரோவர் ஏரியை நாங்கள் அடைந்த பொழுது மாலை 4 மணி என்றாலும் நன்றாக வெயில் அடித்ததால் ஒருசிலர் மட்டும் தீர்த்தமாடினோம் நாங்கள் எதிர்பார்த்த அளவு நீர் படுகுளிராக இல்லை. பேருந்திலேயே அவ்வேரியைச் சுற்றிவந்து அதன்மேற்கிலுள்ள ராவணன் தவம்செய்த ராட்சஸஸ்தல் ஏரியையும் பார்த்தோம்.

மறுநாள் காலை சுடவைத்த மானசரோவர் நீரில் குளியலை முடித்து மிகவும் பக்தி சிரத்தையுடன் நாங்களே ஹோமம் வளர்த்து அவரவர் கொண்டுவந்த ஹோமப் பொருட்களையிட்டு மந்திரங்கள் சொல்லி சுமார் 3 மணிநேரம் பக்தியில் ஆழந்தது மனதிற்கு மிகவும் நிறைவாக இருந்தது.

அன்று மாலை அஷ்டபத் எனும் நந்தி மலைக்கு அருகில் வரை மிகவும் கஷ்டப்பட்டு சுமார் 2 மணிநேரம் நடந்து சென்று கயிலாயத்தின் தெற்கு முகம் பார்த்துவந்தோம் அங்கிருந்து 40 கி.மீ தொலைவிலுள்ள தார்ச்சன் எனுமிடத்தில் தங்கினோம். குளிர் மிக அதிகம். சமதளத்தில் நான்கு அடி நடந்தாலே ஆகஸிஜன் குறைவினால் மூச்சு வாங்கியது. எமத்துவார் எனும் இடத்திலுள்ள சிறிய கோவிலுக்குள் ஒரு கதவின் வழியாகச் சென்று எதிரிலுள்ள மறுகதவின் வழியாக வெளிவந்தோம்.

**16.6.2012** அன்று தார்ச்சனிலிருந்து முதல் நாள் பரிக்ரமா (மலை வலம்) ஆரம்பித்தது சில ஆண்களும் சில பெண்களும் விடுதியில் தங்கிவிட 14 பேருடன் கிளம்பினோம். சுமார் 2 மணி நேரம் குதிரையில் சென்று மதிய உணவிற்குப் பிறகு சிறிது ஓய்வெடுத்தோம் அங்கிருந்து மேற்கு முக தரிசனம் கிடைத்தது மீண்டும் குதிரை மூலம் 2 மணி நேரம் சென்று திராபுக் எனுமிடத்தின் விடுதியில் தங்கினோம். அது 4860 மீட்டர் உயரத்திலுள்ளது. வெயில் நன்கு அடித்தாலும் குளிர்காற்று எங்களை வாட்டி எடுத்தது. அங்கு கைலாயத்தின் மேற்கு முக தரிசனம் மிகஅருகில் சுமார் ஒரு கி.மீட்டர் தூரத்திலுள்ளதுபோல் தெரிந்தது. மேலும் ஐந்து தலை நாகமும் அதன்முன் அதைப்பார்த்த படி நந்தி படுத்திருப்பது போல் எங்களுக்குத் தேன்றியது. அன்று பிரதோஷமாகையால் வெள்ளிமலையின் மிக அருகில் பூஜை செய்து எம்பெருமானைச் சேவிக்கும் பேறு எங்களுக்குக் கிடைத்ததை எண்ணிப் பரவசமடைந்தோம்.

அன்று இரவு அங்கு தங்கிவிட்டு மறுநாள் காலை நாங்கள் சிலர் குதிரைமூலமே தார்ச்சன் திரும்பிவிட்டோம். மீதி 11 பேர் இரண்டாவது நாள் பரிக்கிரமா சென்றார்கள். மிகக் கடுமையான பயணம் 4, 5 மணிநேரம் குதிரையில் சென்று பிறகு 6, 7 கி.மீ இறக்கமான சரிவில் மிகவும் சிரமத்துடன் நடந்து

பிறகு சிறிது குதிரையில் பயணித்து மிகவும் உயரத்திலுள்ள ஆபத்தான ஆக்ஸிஜன் குறைவான டோல்மா பாஸ் எனுமிடத்தில் இரவு தங்கி, மூன்றாவது நாள் சிறிது தூரம் குதிரை மூலமும் பிறகு நடந்தும் காலை 11 மணியளவில் நாங்கள் தங்கியிருந்த தார்ச்சன் வந்தடைந்தவர்களைக் கண்டு நாங்கள் நிம்மதிப் பெருமூச்சுவிட்டோம்.

பிறகு நாங்கள் அடுத்தநாள் அங்கிருந்து புறப்பட்டு சாகாவந்து, நியாலம் அடைந்து சீன எல்லைகடந்து, வழியிலேற்பட்ட மணல் சரிவினால 3, 4 மணி நேரம் காத்திருந்து பிறகு மிகவும் மோசமான டவுன் பஸ் மூலம் பயணித்துக் காட்மண்டு வந்தடைந்தோம். வழியெல்லாம் மேகத்தின் வண்ண வண்ண ஜாலங்கள், டிசைன்கர் மலைமுகட்டின் வண்ண எழிற்கோலங்கள் அருவிகள் கண்டு மகிழ்ந்தோம்.

22.6.12 அன்று திரு.முத்துப்பழநியப்ப அண்ணன் முக்திநாத் யாத்திரையை தொடர எங்களுடன் வந்தினைந்தார்கள். காட்மண்டுவிலிருந்து பஸ்ஸிலும் பிறகு ரோப்கார் மூலமும் சென்று, வரிசையில் 3 மணிநேரம் காத்திருந்து மனக்காம்னா அம்மனைத்தரிசித்து போக்ரா எனும் ஊரில் தங்கினோம். மறுநாள் அங்கிருந்து 25 நிமிட ஹெலிகாப்டர் பயணம் மூலம் ஜாம்சம் எனும் ஊரஅடைந்து ஜீப்பில் 1 1/2 மணிநேரம் பயணித்து மலை மீதுள்ள முக்திநாத் எனும் வைணவக்கோயிலை அடைந்தோம். அங்குள்ள 108 தீர்த்தங்களின் பனிக்கட்டி மாதிரிக் குளிர்ந்த நீரில் நீராடி முத்தி நாதரைத் தெரிசித்து ஜீப் மூலம் ஜாம்சம் வந்தடைந்தோம். போக்ரா செல்வதற்கு வானிலை காரணமாக அன்றும், மறுநாறும் ஹெலிகாப்டர் பயணம் தடை செய்யப்பட்டிருந்ததால் மிகவும் கஷ்டப்பட்டு காலை 10 மணிக்குப் பஸ் மூலம் புறப்பட்டு பயங்கர சிரமத்துடன் இரவு 1 மணிக்கு போக்ரா வந்தடைந்தோம். பிறகு காட்மண்டு வந்து மீண்டும் ஒருமுறை பசுபதிநாதரைத் தரிசித்து அன்று இரவே விமானம் மூலம் டெல்லி வந்து 28.06.2012 அன்று விமானம் மூலம் இரவு நல்லபடியாகச் சென்னை வந்தடைந்தோம்.

பொதுவாக இப்பயணம் எங்களது நீண்டநாளைய கனவை நனவாக்கியதுடன் மிகுந்த ஆத்மபலத்தைத் தந்தது. குறிப்பாக மழை, பனிப்பொழிவு, மேகமூட்டமில்லாமல் வானிலை ஒத்துழைத்தது அது எங்கள் குழுவினருடைய பூஜையின் பலன்தான். எங்கள் குழுவில் இருந்த அனைவரும் ஒருவர்க்கொருவர் மிகவும் உதவியாக இருந்து ஒரே குடும்பம்போல் வெற்றிகரமாக இப்பயணத்தை முடித்தோம். இப்பயணத்தை ஏற்பாடு செய்த நெற்குப்பை நகரத்தார் சங்கத்தின் தலைவர் திரு. PL.A.லட்சுமணன் மற்றும் திரு.சுந்தர், திரு.மகேஷின் சேவையை நாங்கள் நன்றியுடன் பாராட்டுகிறோம். எங்கள் குடும்பங்களை விட்டு இவ்வளவு தூரத்தில் கடுமையான பயணம் மேற்கொண்ட எங்களின் பயணத்தைப்பற்றி ஒவ்வொருநாளும் வீட்டிலுள்ள எங்கள் குடும்பத்தினருக்கு SMS மூலம் தெரியப்படுத்தி எங்களுக்கு நிம்மதியளித்தனர்.

இப்பணம் கொஞ்சம் கடினமான பயணம் என்றாலும் கைலாயம் செல்ல விரும்புபவர்கள் 55 வயதிற்குள் சென்றுவருவது நலம். மேலும் குளிரைப் பொறுத்துக் கொள்ளும் உடல்வாகுகொண்டவர்கட்டு எளிது

(காவாய்கனகத்திரளே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி)

**வாசுகி சிங்காரம்**
**கண்ணம்மை லெட்சுமணன்**

ஓம் நமசிவாய